بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# Friday Sermon/வெள்ளிக்கிழமை குத்து.்.பா 17/03/2017

(17 Jamad'ul Aakhir 1438 Hijira)

## The Seal of the Prophets/ நபிமாழகளின் முத்திரை(சீல்)



### HAZRAT KHALIFATHULLAH MUNIR AHMAD AZIM (A)

உலக மக்களுக்கு சலாம் தெரிவித்த பிறகு தஷஹ்ஹுதும் தஅவசும் சூரா.்.அல் பாத்திஹாவும் ஓதிக்கொண்டு ஹஸ்ரத் கலீ.்.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை) அவர்கள் கீழ்வருமாறு உரையாற்றினார்.

"ஈமான் கொண்டவர்களே! அல்லாஹ்வை அதிகமதிகமாக தியானம் செய்யுங்கள். இன்னும் காலையிலும் மாலையிலும் அவனைத் துதி செய்யுங்கள். உங்களை இருளிலிருந்து வெளியேற்றி ஒளியின் பால் கொண்டு வருவதற்காக. உங்கள் மீது அருள்புரிகிறவன் அவனே இன்னும் அவனுடைய மலக்குகளும் அவ்வாறே பிரார்த்திக்கின்றனர். மேலும் அவன் நம்பிக்கையாளர்களிடம் மிக்க இரக்கமுடையவனாக இருக்கின்றான். அவனை அவர்கள் சந்திக்கும் நாளில் "ஸலாமுன்" (உங்களுக்குச் சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக) என்பதுவே (அவர்களுக்கு கிடைக்கும்) சோபனமாகும். மேலும் அவர்களுக்காக கண்ணியமான நற்கூலியையும் அவன் சித்தப்படுத்தியிருக்கின்றான். நபியே! நாம் நிச்சயமாக உம்மைச் சாட்சியாகவும் நன்மாராயங்கூறுபவராகவும் அச்சமூட்டி எச்சரிப்பவராகவுமே அனுப்பியுள்ளோம். இன்னும் அல்லாஹ்வின் பால் (மனிதர்களை) அவன் அனுமதிப்படி அழைப்பவராகவும் பிரகாசிக்கும் விளக்காகவும் உம்மை அனுப்பியுள்ளோம். எனவே நம்பிக்கை கொண்டோர்களுக்கு அல்லாஹ்விடமிருந்து அவர்களுக்கு நிச்சயமாக பேரருட்கொடை இருக்கின்றதென நன்மாராயங் கூறுவீராக! அன்றியும் கா.்.பிர்களுக்கும்

**நயவஞ்சகர்களுக்கும் நீர் வழிப்படாதீர். அவர்கள் தரும் துன்பத்தைப் புறக்கணித்துவிடுவீராக. அல்லாஹ்வின் மீதே முற்றிலும் உறுதி கொண்டு இருப்பீராக! அல்லாஹ்வே போதுமான பாதுகாவலனாகயிருக்கின்றான்''** (33 : 42 – 49)

இந்த குர்ஆனிக வசனங்களைத் தொடர்ந்து "காத்தமுன்னபியீன்"(Khatam-an-Nabiyyin) என்ற வார்த்தையை எடுத்துரைக்கப்படுகின்றது. மேல் கூறிய இவ்வசனங்கள் "காத்தமுன்னபியீன்" என்ற விஷயவுமாக முற்றிலும் தொடர்புடையதாகும். ஏனெனில் பரிசுத்த தூதர் முஹம்மது(ஸல்) அவர்களின் வருகை அனைத்துலகிற்காகவும் ஆகும். அக்காரணத்தால் தான் ஒவ்வொரு மனிதர்களுடையவும் சாட்சியாக அன்னார் இருக்கின்றார். இவ்விஷயம் திருமறையின் மற்று வசனங்கள் வாயிலாக உறுதியாகின்றது. அதாவது மற்றனைத்து இறைத்தூதர்களுடையவும் சாட்சியாக முஹம்மது(ஸல்) அவர்கள் இருக்கின்றார். ஆகவே **"ஷாஹிதன்''**(Shahidan) என்பதால் அர்த்தமாக்கப்படுவது நாம் உம்மை (முஹம்மது ஸல்) அனைத்து மக்களுடையவும் சாட்சியாக நியமித்திருக்கின்றோம் என்றாகும். அதாவது கடந்து சென்ற மக்களுக்கும் இப்போதிருக்கும் மக்களுக்கும் இனி வருகின்ற மக்களுக்கும் அதைப் போன்றே கடந்து சென்றதும் இனிதோன்றயிருப்பதுமான அனைத்து இறைத்தூதர்களுக்கும் நீர் ஒரு சாட்சியாவீர். மட்டுமின்றி அவர்கள் யாவருக்கும் நீர் ஒரு எச்சரிக்கையாளரும் ஆவீர். அதாவது தூய தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள், அன்னாருக்கு முன்னதாக தோன்றியவர்களுக்கும் இனி தோன்றயிருப்போர்களுக்கும் ஒரு சாட்சியாவார் என சுருக்கம். அப்பொழுது ஒரு கேள்வி எழும்பலாம் அதாவது "தூதர்(ஸல்) அவர்கள் நேரடியாக கண்டுகொள்ளாதவர்களுக்கு ஒரு சாட்சியாகயிருக்க எவ்வாறாகும்? அதன் பொருள் மற்றனைவர்களுடைய செயல்களையும் நம்பிக்கைகளையும் அளப்பதற்கான அளவுகோலாக (measure) அன்னார் திகழ்கின்றார் என்றாகும்.

ஒரு செயல் நன்மை வாய்ந்ததா அல்லது தீமை வாய்ந்ததா என்று தீர்மானித்துக் கொள்வது பரிசுத்த தூதர் முஹம்மது(ஸல்) வின் சாட்சியம் வாயிலாகவே ஆகும். மற்று இறைத்தூதர்களின் செயல்களை பரிசோதித்துக் கொள்வதும் அன்னார் (அன்னாரின் வாழ்க்கை எனும் அளவுகோல் வாயிலாக) மூலமேயாகும். அது கடந்து சென்ற இறைத்தூதர்களாகயிருந்தாலும் சரி எதிர்காலத்தில் வருகைதரும் இறைத்தூதர்களாகயிருந்தாலும் சரி! இங்கு பயன்படுத்தப்பட்டிருக்கும் "காத்திம்"(Khatim) என்ற வார்த்தை இந்த வசனத்துடன் எந்த அளவிற்கு தொடர்புடையதென உங்களுக்கு இப்போது நன்கு உணரயியலும் அதாவது "காத்திம்" என்றால் சாட்சியம் அளித்தலாகும். அதாவது சாட்சியம் அளிப்பதன் வாயிலாகவே ஓர் விஷயம் உண்மை என்று ஒருவருக்கு கூறிக்கொள்ள முடிவது. அது ஒரு சிறந்த சாட்சியமாகயிருந்தால் அந்த முத்திரை(Khatim) வாயிலாக அது எல்லாவகையிலும் ஒரு மாபெரும் சான்றாக மாறிவிடும். இது உண்மை என உறுதிப்படுத்திக் கொள்வது அதன் (அந்தசாட்சியத்தின்) மகத்துவத்தினுடையவும் செயல்முறைகளுடையவும் அடிப்படையிலாகும். ஆகவே "காத்திம்" (Khatim) என்பது ஒரு அளவுகோலாகும். அது, மறைந்தகால

மக்களுக்கும் நிகழ்கால மக்களுக்கும் எதிர்கால மக்களுக்கும் ஆன ஒரு அளவு கோலாகும். அதாவது ஒரு சாட்சிய பத்திரம்.(Testimonial) இது பரிசுத்த தூதர் முஹம்மது(ஸல்) அவர்களைப்பற்றிய ஒரு உதாரணமாகும். அதாவது இது ஒரு முன்மாதிரியாகும். மறைந்த கால இறைத்தூதர்களுடையவும் நிகழ்காலவும் எதிர்காலத்தில் வருகை தரும் இறைத்தூதர்களுடையவும் செயல்களையும் அவர்களின் பகுதிகளையும் பதவிகளையும் (பகுத்தறிந்து) விதித்துக் கொள்வதற்கான ஒரு அளவுகோலாக இதை (அளவுகோல்-தூதர்(ஸல்) வின் முன் மாதிரியான வாழ்க்கை முறைகள்) பயன்படுத்தப்படுகின்றது. அதாவது இந்த அளவுகோல் வழியாக அந்த (அனைத்து) இறைத்தூதர்களின் வார்த்தைகளையும் போதனைகளையும் அளந்தபின் உண்மையில் அத்தூதர்கள் மன்னிப்பிற்குரியவர்களா அல்லது தண்டனைக்குரியவர்களா? என்று தீர்மானிக்கப்படுகின்றது.

ஆகவே "ஷாஹிதன்"(Shahidan) என்ற வார்த்தைக்கு காத்திம் (Khatim) என்ற வார்த்தையுடன் மிக பெரிய தொடர்பிருக்கின்றது. அதன்படி தூதர்(ஸல்) அவர்கள் இந்த அர்த்தத்தில் ஒரு சாட்சியாளராகயிருக்கின்றார். அத்தோடு வேறு சிலருக்கு ஒரு எச்சரிக்கையாளராகவும் அத்தோடு மற்று சிலருக்கு நற்செய்தியாளராகவும் இருக்கின்றார். இந்த நிலையில் இதற்கு இரண்டு அர்த்தங்கள் உள்ளது. முதலாவது நபிகரீம்(ஸல்) அவர்கள்தோன்றுவதற்கு முன்னதாகவே மரணமடைந்தவர்களுக்கு தூய தூதருடன் எந்த தொடர்புமில்லை. அவர்களைப் பொறுத்தவரையில் இந்த எச்சரிக்கையும் நற்செய்தியும் அவர்களின் மரணத்திற்கு பின் நிகழும் வாழ்க்கையிலாகும். பாக்கியசாலிகள் இவர்களாவார்கள் அதாவது, பரிசுத்த தூதர் முஹம்மது(ஸல்) அவர்களின் நடைமுறையை பின்பற்றுவோர்கள் ஏனெனில் அவர்கள் மன்னிப்பிற்கு தகுதியுடையவர்கள். அதைப் போன்றே துரதிர்ஷ்டசாலிகள் என்பது பரீட்சையில் வெற்றியடையாதவர்கள் அவர்களுக்கு நற்செய்திகளோ எச்சரிக்கைகளோ ஒரு பலனும் அளிக்கவில்லை. அவர்கள் தேர்வில் தோல்வியடைந்தவர்கள். அவர்களுக்கு இந்த நற்செய்திகளோ எச்சரிக்கைகளோ இவ்வுலகில் ஒரு பலனும் அளிக்கவில்லை. ஆகவே இந்த தூதுச்செய்தி பெற்றுக் கொண்டோர்களுக்கு இந்த நற்செய்திகளும் முன்னெச்சரிக்கைகளும் வாயிலாக அவர்களின் தினசரி வாழ்க்கையில் நல்வார்த்தைகளும், வழிகளும் கிடைத்துவிடும். அல்லாவிட்டால்(இந்த நற்செய்திக்கு ஏற்றவாறு அவர்கள் செயல்படாமலிருந்தால்) அவர்கள் பெரிய தண்டனைகளுக்கும் அவமானங்களுக்கும் ஆளாக வேண்டியதாகயிருக்கும்.

இந்த நற்செய்திகளும் முன் எச்சரிக்கைகளும் இவ்வுலக வாழ்க்கையில் நம் செயல்களை சீரமைத்துக் கொள்வதற்காக பயன்படுத்த வேண்டியதாகும். அதைப் போன்றே இவ்வுலக வாழ்க்கையின் நம் செயல்களின் விளைவான பிரதிபலன் மறுமையில் வெளிப்பட்டு கொள்ளவும் செய்யும். தொடர்ந்து அல்லாஹ் கூறுகின்றான். அதாவது "அவன் உம்மை அனுப்பியுள்ளான் அல்லாஹ்வின் அனுமதிப்படி அவன் பால் மக்களை அழைப்பவராகவும் (அனுப்பியுள்ளோம்). நாம் உம்மை பிரகாசிக்கும் விளக்காகவும் (அனுப்பியுள்ளோம்) அந்த விளக்குக்கு மற்று விளக்குகளை ஒளிக்கச் செய்வதற்கான ஆற்றல் வழங்கப்பட்டிருக்கின்றது.

**Dai-Illallah தாஈ இலல்லாஹ் : அல்லாஹ்வின் பால் அழைப்பவர்.** இந்த வார்த்தை பிரத்தேகமாக கூறிப்பிட்டிருப்பது, பரிசுத்ததூதர் முஹம்மது(ஸல்) அவர்களைக் குறித்தாகும். என்றிருந்தாலும் எல்லா இறைத்தூதர்களும் அவர்களின் தோழர்களும் அல்லாஹ்வின் பால் (மனிதர்களை) அழைத்தோர்களே ஆவார்கள். ஆனால் மற்று இறைத்தூதர்களுக்கு வேறுவார்த்தைகளை பயன்படுத்தப்பட்டதாக நமக்கு கண்டுகொள்ள முடிகின்றது.

ஆனால் வேறு எந்த இறைத்தூதர்களின் விஷயத்திலும் இவ்வார்த்தை (தாஈ இலல்லாஹ்) பயன்படுத்தப்பட்டிருப்பதாக நமக்கு காணயியலாது. “இறைத்தூதரே! அல்லாஹ்வின் கட்டளைகள் மீது ஆணையாக! நீா் அல்லாஹ்வின் பால் அழைப்பவராகயிருக்கின்றீா். முஹம்மது(ஸல்) அவர்களிடத்தில் அல்லாமல், அல்லாஹ் வேறு ஒரு இறைத்தூதரையும் நேரடியாக அழைத்துக் கூறுவதாக நான் எங்கும் கண்டு கொண்டதில்லை நாம் உம்மை “தாஈ இலல்லாஹ்” Dai-Illallah வாக நியமித்துள்ளோம். முஹம்மது(ஸல்)வை கூடாமல் வேறெந்த இறைத்தூதர்களுக்கும் இவ்வகையிலான ஒரு “பதவிப்பெயர்” (honour) வழங்கப்பட்டதில்லை. அது அல்லாஹ்விடமிருந்துள்ள ஒரு பிரத்தேகமான வரதானமாகும். அன்னாரின் உன்னதமான நிலையும் பதவியும் முன்வைத்து கொண்டே இவ்வகையிலான ஒரு பதவிப்பெயர் அன்னாருக்கு வழங்கப்பட்டிருப்பது.

“பித்னிகி”(Bi-iznihi) என்பது மற்றொரு முக்கியமான விஷயத்தை சுட்டிக்காட்டுகின்றது. அதாவது ஏராளமான செயல்கள் மனித கட்டுப்பாட்டிற்கும் அப்பாற்பட்டதாகயிருக்கின்றது. அது அவர்களின் ஆற்றல்களுக்குட்பட்டதல்ல. அவர்களின் எல்கைக்கு அப்பாலிருப்பதுமாகும். அவர்களின் கட்டுப்பாட்டிற்கும் எல்கைக்கும் அப்பாா்பட்ட விஷயங்களிலையே பிராா்த்தனையின் அற்புதங்கள் ஆரம்பித்து கொள்வது. மனிதர்களுக்கு எல்லா ஆற்றலும் இல்லை. ஆனால் நிச்சயமாகவும் அதனைத்தும் அல்லாஹ்வுக்கு இருக்கின்றது. ஒவ்வொரு மனிதர்களும் இதை உணா்ந்துக் கொள்ள வேண்டும். அதன் காரணத்தாலே, முழுமைப்படுத்திக் கொள்ளயியலாத வகையிலான இச்செயல்களை செய்து கொள்வதற்கு சிலவேளைகளில் தன் அடியார்களிடம், அல்லாஹ் கூறிக்கொள்வது. ஆனால் அல்லாஹ்வின் உதவியால் அதை முழுமைப்படுத்திக் கொள்ள முடிந்துவிடும். இவ்வகையிலான விஷயங்கள் (முழுமையடைந்துவிடும் பொழுது) நிகழும் பொழுது பிறமக்கள் அர்ப்புதத்தோடு கூறிக்கொள்வார்கள் அந்த மனிதா் என்ன செய்தார்? அது எப்படி பூர்த்தியானது? அவா் அசாதாரணமான ஒரு மனிதரே ஆவாா்? ஆனால் இவ்விஷயங்கள் இறைத்தூதர்கள் வாயிலாக நிகழும் பொழுது அதன் மகத்துவத்தையும் அதன் மதிப்பையும் அவர்கள் சுயம் ஏற்றெடுப்பதில்லை. காரணம் இதனைத்தும் முழுமையடைந்தது அல்லாஹ்வின் அருளாலாகும் (என்று அவர்கள் உணருகின்றனர்). உதாரணமாக ஈசாநபி(அலை) அவர்கள் மரணித்தவர்களுக்கு உயிா் வழங்கிக்கொண்டாா் என கூறப்பட்டிருக்கும் இடமெல்லாம் அன்னாா் உரிமைக்கோருவது அல்லாஹ்வின் கட்டளைகளால் அது நிறைவடைந்துக் கொண்டது என்றாகும். நானோ இறைத்தூதா் இவ்விஷயத்தில் நான் எதுவும் செய்யவில்லை. பொதுவாக

அல்லாஹ்வின்பால் மக்களை அழைத்துக்கொள்தல் எனும் வேலையை, மிக சுலபமாக பூர்த்திகரித்திட முடியும் என நினைத்து விடலாம். ஆனால் அதன் விளைவினை குறித்து ஆராய்ந்து கொண்டால் இது மிக வருத்தத்திற்குரிய விஷயமென உணரமுடியும். காரணம் இதன்பால் இருக்கும் விஷயம் என்பது மரணித்தவர்களுக்கு உயிர் கொடுப்பதாகும் (ஆன்மீகமாக மரணித்துக் கொண்டோர்களுக்கு உயிர் வழங்குதல்). அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு ஏற்றவாறு மரணித்தவர்களுக்கு ஈசா(அலை) உயிர் வழங்கியது போன்று! **அதைப்போன்றே தூயதூதர் முஹம்மது(ஸல்) அவர்களுக்கும் ஒரு மாபெரும் வேலையிருந்தது. அது மரணித்தவர்களை சீரமைத்துக் கொள்தலாகும். அவ்வேலையும் அல்லாஹ்வின் கட்டளைகள் படியே முழுமைபடுத்திக் கொள்ள அன்னாருக்கு முடிந்தது. அல்லாவிட்டால் மரணித்தவர்களை வாழ்க்கையின் பால் திரும்பப் பெறச் செய்தல் என்பது முற்றிலும் சிரமகரமான விஷயமாகும். இந்த பிரத்தேகமான வேலையை அன்னாருக்கு செய்து முடித்துக்கொள்ள முடிந்ததன் காரணம் அவர் ஒரு “தாஈ இலல்லாஹ்” ஆக இருந்ததனாலாகும். (அல்லாஹ்வை வணங்குவதற்கு மக்களை அழைப்பவன்)**

“வ சிறாஜன் முனீரா”(wa-Siraj-am-Munira) என்பதால் அர்த்தமாகிக் கொள்வது அன்னார்(ஸல்) சுயம் ஒரு விளக்காகயிருந்தார் என்றாகும். அவ்வகை விளக்கிற்கு மற்று விளக்குகளையும் ஒளிக்கச் செய்ய முடிகின்றது. இவ்விஷயமும் “காத்தீம்” என்ற வார்த்தையுடன் ஆழமான தொடர்புள்ளது. அவன் அருள் கொடைகள் ஒரு வகையிலும் முடிந்து விடுவதில்லை மட்டுமின்றி எல்லாவித அருள்களுடையவும் நுழைவிடமும் அதுவேயாகும். **“காத்திம்” என்ற வார்த்தையின் மற்றொரு பொருள் ஒருவருக்குள் குடிக்கொள்ளும் தன்மைகள் வாயிலாக பிற மக்களை ஈர்த்துக் கொள்ள முடிந்துவிடுதல் என்பதாகும்.** இதுவே மனிதனின் இயல்பு. “காத்தமுன்னபியீன்” என்ற வசனம் இறக்கப்பட்ட சூழ்நிலையைக் குறித்து ஆராய்ந்தால் தன் எதிராளிகளின் கடும் குணமும் பகைமையும் அவர்களின் நல்லொழுக்கமற்ற பேச்சுவார்த்தைகளும் அதாவது அன்னார் (தூய தூதர்(ஸல்)) அனைத்தையும் இழந்தவன் என்றும் பின்தொடர் (ஆண் வழியில் வரும் தொடர் தலைமுறை) தலைமுறையற்றவன் என்றும் (அவர்கள் ஆட்சேபித்தனர்) ஒரு மனிதன் என்ற வகையிலும், ஒரு தந்தை என்ற வகையிலும், ஒரு தூதர் என்ற வகையிலும் அன்னாரை பரிகசித்தனர். (அப்பகைவர்களின் நோக்கத்தில்) அன்னாரின் தலைமுறைகளைக் கூட அன்னாருக்கு எதிராக அவர்கள் கண்டுகொண்டனர். இவ்விஷயத்திற்கு திருக்குர்ஆன் சாட்சியமளிக்கின்றது.

**இந்த நிலையில் நீங்கள் “காத்திம்” என்ற வார்த்தையை வாசிக்கும் பொழுது (நீங்கள் உணர வேண்டும்) நம் தூய தூதர்(ஸல்) அவர்கள் மீது பகைவர்கள் சூட்டிய அடிப்படையற்ற அனைத்து அவதூறுகளையும் அல்லாஹ் தூக்கி வீசிக் கொண்டான் என்றும், இந்த எல்லாவித குற்றச்சாட்டுகளும் மாய்ந்து விட்டது என்றும் (நீங்கள் உணர வேண்டும்). இதைக்குறித்தான அல்லாஹ்வின் கூற்றை பாருங்கள் உயிரியல் அடிப்படையில் கூறினால் இது முற்றிலும் உண்மையாகும். அதாவது “நீர் எவர்**

**ஒருவருடையவும் தந்தையல்ல". ஆனால் ஏய் முஹம்மது(ஸல்) "உமக்கு நாம் வழங்கியிருக்கும் தன்மைகள் வாயிலாக மக்களை படைத்துக் கொள்வதற்கான ஆற்றல் உங்களுக்கு இருக்கின்றது. "தாஈ இலல்லாஹ்" என்ற கூற்றின் அடிப்படையும் இதுவேயாகும். அதைப் போன்றே இவ்வகை தன்மைகளை பிரகடனப்படுத்திக் கொள்வதற்கான ஆற்றலும் வழங்கப்பட்டிருக்கின்றது. உங்களின்(முஹம்மது) தோழர்களில் பட்ட ஏராளமான மக்களுக்கும் இதைப் போன்றே இவ்வகை தன்மைகளை பிரகடனப்படுத்திக் கொள்வதற்கான ஆற்றல்கள் வழங்கப்பட்டிருக்கின்றது. அதைப்போலவே சிறாஜன் முனீரா என்பதிலும் "நீர் உயிருள்ள விளக்காவீர்". "மற்று விளக்குகளை ஒளிக்கச் செய்வதற்கான ஆற்றல் உமக்குண்டு". இவ்விளக்குகள் யாவும் நிரந்தரமாக ஒளித்து நிற்கும் உம் பிரகாசத்தால் அனைத்துலகும் ஒளித்திருக்கும்.**

இவ்விஷயத்தை முன் வசனங்கள் உறுதிப்படுத்துகின்றது "காத்தமுன்னபியீன்" என்ற வசனத்தை தொடர்ந்து அல்லாஹ் கூறுகின்றான். ஏய் நம்பிக்கை கொண்டோர்களே நீங்கள் அல்லாஹ்வை அதிகமான வகையில் தியானம் செய்துக் கொள்ளுங்கள். அல்லாஹ்வை மேலும் மேலும் நினைவு கூறுதல் என்பது நம்பிக்கையாளர்களுக்கு கட்டாயமாகும். இரவிலும் பகலிலும் அவன் மகத்துவத்தை புகழ வேண்டும். இந்த விஷயம் மிக பெரிய நிலையில் தூய தூதர் முஹம்மது(ஸல்) அவர்களின் ஆன்மீக தலைமுறைகளுமாக இணைந்திருக்கின்றது.

அற்புதம் வாய்ந்த நிலையில் இந்த இரண்டு விஷயங்களுக்கு மத்தியில் "காத்தமுன்னபியீன்" என்ற வார்த்தையை எடுத்துரைக்கப்பட்டிருக்கின்றது. ஒரு புறம் பார்த்தால் எதிராளிகள் அன்னாருக்கு எதிராக அவதூறுகள் எழுப்புகின்றன. நீர் ஒரு மனிதனுடையவும் தந்தையல்ல என்று. ஆனால் இவ்விஷயத்தை அல்லாஹ் எடுத்துக் கூறிய பிறகு இந்த ஆட்சேபனைக்கு இவ்வாறு பதிலளிக்கின்றான். அன்னார் உங்களைப் போன்ற (தீய மக்கள் அவநம்பிக்கையாளர்கள் இறைத்தூதர்களின் மகத்துவத்தையும் அந்தஸ்தயும் இழிவுப் படுத்துகின்றோர்கள்) எவர் ஒருவருடையவும் தந்தையல்ல. உங்களைப் போன்ற ஆள்களின் தந்தையாகயிருப்பதில் அந்தஸ்து எதுவுமில்லை. மாறாக அவ்வாறு இருந்தால் அது அவமானமும் அந்தஸ்தில்லாதவையும் ஆகும். இவ்வகை மக்களை தலைமுறையாக்கிக் கொள்வது எந்த ஒரு தந்தைக்கும் கண்ணியமானதல்ல.

**இவ்வசனத்தை இதைவிட நல்ல வகையில் நமக்கு உணரயியலும் அதாவது "முஹம்மது(ஸல்) உங்களைப் போன்ற எவர் ஒருவருக்கும் தந்தையல்ல ஆனால் நிச்சயமாக அன்னார் அல்லாஹ்வின் தூதராகயிருக்கின்றார். மேலும் இறைத்தூதர்களை உற்பத்தி செய்வதற்கான ஆற்றலுடையவராகவும் இருக்கின்றார். இவ்வகை இறைத்தூதர்கள் அருளுக்குரியவர்கள் ஆவார்கள். அன்னார் ஒரு ஆன்மீக தந்தையாகயிருக்கின்றார். அன்னாருக்கு இறைத்தூதர்களை படைத்துக் கொள்ள முடியும் இறைத்தூதர்களை படைத்துக் கொண்டுமிருப்பார்.**

இந்த விஷயம் வேறொரு வசனத்திலும் எடுத்துரைக்கப்பட்டிருக்கின்றது. மிக அழகான நிலையில் அந்த வார்த்தையில் மிகப்பெரிய ஒரு நற்செய்தியை காணலாம்.

அந்த நற்செய்தி என்பது ஆன்மீக பரம்பரையின் வருகையாகும். ஒன்றாவதாக இது கற்பிப்பது ஆன்மீக பிறப்பு என்பதாகும். இதற்கு ஏராளமான உதாரணங்கள் நமக்கு கண்டுவிடலாம். தூயதூதர்(ஸல்) அவர்கள் ஆன்மீகமாக சீர்திருத்திய அனேகம் மக்களின் முன் மாதிரியான வாழ்க்கை நம் முன்னால் இருக்கின்றது. அன்னாரின் “சஹாபா”(Sahaba) உட்பட்ட ஏராளமான மக்களுக்கு நபியித்துவத்தின் வல்லமையும் அதன் ஒளியும் கிடைத்ததுண்டு. அதற்கு பின்னர் ஒரு குறிப்பான தலைமுறை (பின்தொடர் காரர்கள்) அன்னாருக்கு கிடைப்பதாகும் என்ற கூற்றையும் நமக்கு பார்க்கயியலும். இவ்விஷயத்தின்பால் சற்று அதிகம் ஒளி வழங்கும் திருமறை வசனத்தின் ஒரு “ரபரன்ஸ்” நான் கூறுகின்றேன். அதிகாரம் 3ல் 43-ம் வசனத்திற்கு முன்புள்ள ஒரு வசனத்தில் ஹஸ்ரத் ஜகரிய்யா தீர்க்கதரிசி(அலை) அவர்கள் ஒரு புதல்வனுக்காக அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்கின்றார். அல்லாஹ்விடமிருந்துள்ள ஒரு அடையாளமாக ஒரு புதல்வனை வழங்கி கொள்ள தன் முதுமைகட்டத்தில் பிரார்த்தனை வாயிலாக அல்லாஹ்விடம் கேட்டுக்கொள்கின்றார். சாதாரணமான நிலையில் உடலளவிலான ஆற்றல்களை இழந்தப் பிறகு புதல்வர்கள் கிடைப்பதே அரிது. இவ்விஷயத்தைக் குறித்து திருக்குர்ஆன் விளக்குகின்றது அதாவது அன்னாரின் எலும்புகள் பலவீனமடைந்துவிட்டன. தலையும் நரயால் இலங்குகின்றது. ஆனால் (அந்த கட்டத்தில் கூட) அல்லாஹ்விடமான அன்னாரின் மற்றாடுதலுக்கு, அன்னாரின் அப்பிரார்த்தனைக்கு அவன் பதிலளித்தான். அன்னாருக்கு அவன் நற்செய்தியளித்தான். அதாவது உமக்கு நாம் ஒரு புதல்வனை அளித்துக் கொள்வேன் என்று! ஒரு மகனுக்காக அல்லாஹ்விடத்தில் பிரார்த்தனை சமர்பித்த உடனே அப்பிரார்த்தனைக்கு பதிலாக “ஒரு மகனை வழங்கிக் கொள்வேன்” என்று நற்செய்தி அளிக்கின்றான். அன்னார் (அந்நற்செய்தியை கேட்டு) அற்புதமடைந்துவிட்டார். முதுமையின் தள்ளாத பருவத்தை நான் அடைந்திருக்கும் நிலையில் எனக்கு எவ்வாறு ஒரு புதல்வன் உண்டாகுவான்?

அன்னார் இறைவனிடத்தில் (பிரார்த்தனை வழி) கேட்டார். இறைவா இவ்விஷயம் நிச்சயமாக உன்னால் முடியும் என்ற என்திட நிச்சயத்தை அதிகரிப்பதற்காக நான் உணர்ந்துக் கொள்ளும் வகையில் ஒரு அத்தாட்சி வழங்குவாயாக! வாக்களிக்கப்பட்ட புதல்வன் பிறப்பதைக் குறித்து ஒரு அத்தாட்சி வழங்கிக் கொள்ள அன்னார் கேட்டுக் கொண்டிருந்தார். அதற்கு பதிலாக அல்லாஹ் கூறியதாவது “நீர் சவுக்கியத்துடன் இருக்கும் நிலையிலேயே மூன்று இரவு பகல்கள் நீர் மக்களுடன் பேசமுடியாமலிருப்பீர். மேலும் அல்லாஹ்விற்காக அனைத்தையும் சமர்பித்துக் கொள்வீர். அல்லாஹ் அன்னாரிடம் மேலும் கூறினார். காலையிலும் மாலையிலும் இறைவனை புகழ்ந்து அவன் எண்ணத்தில் தியானம் புரிந்துக் கொள்வீர்.

“காத்தமுன்னபியீன்” என்ற விஷயத்தில் எடுத்துரைக்கப்பட்டிருக்கின்ற அதே விஷயமாகும் இதென்று நமக்கு காண முடியும். அதில் இறுதி நபி எனும் வார்த்தை எதுவுமில்லை. மாறாக அதில் தூய தூதர் முஹம்மது (ஸல்) அவர்களின் தோழர்களிலிருந்து மஹானான ஒரு நபியின் தோன்றத்தைக் குறித்த நற்செய்தியே அடங்கியிருக்கின்றது.

**யா அல்லாஹ்! அனைத்து விதமாக பலவீனங்களிலிருந்தும் நீ மீட்ச்சியை பெற்றவனாகயருக்கின்றாய். எல்லா புகழும் உன்னக்கேயாகும். நீ அன்றி வணக்கத்திற்குரியவன் வேறு எவருமில்லை என்று நான் உறுதியளிக்கின்றேன். பாவங்களிலிருந்துள்ள மீட்சிக்காக நான் உன்னிடம் மன்றாடுகின்றேன். பச்சாதாபத்துடன் நான் உன்பால் திரும்பிக் கொள்கின்றேன்.**

அதை தொடர்ந்து இவ்வசனத்தை காணலாம். **“யா அய்யுஹதல்லதீனா ஆமனு உத்க்குறுக்குல்லாஹ் திக்கரன்கசிறா” ஹஸ்சிறா”** ஹஸ்ரத் ஜகரிய்யா (அலை) அவர்களுக்கு வெளிப்பாடுகள் வழியாக வழங்கிய அதே தூவா வாகுமிது. தூவாவை ஏற்றுக் கொள்வதைக் குறித்து விழ்ப்புணர்வு வழங்கி கொள்ளும் ஒரு அடையாள பிரார்த்தனையாகும் இது. ஒரு நற்புதல்வனை வழங்கிக்கொள்ள தாமதமாகவில்லை. அது வாயிலாக அந்த அடையாளம் முழுமைப்பெற்றது.

அதற்கு பின் திடீரென அல்லாஹ் மக்களை நினைவூட்டுகின்றான். அல்லாஹ்வை மிக அதிகமாக தியானம் செய்து கொள்வதற்கும் இரவும் பகலும் அவன் மகத்துவத்தை புகழ்ந்திருப்பதற்கும். இச்செயல்களை கடைப்பிடிப்பதன் வாயிலாக அவன் அருள் கொடைகள் அவர்கள் மீது இறங்கி விடுகின்றது. இப்போதும் அது இறங்கிக் கொண்டிருக்கின்றது. அத்தோடு இது மனிதர்களுடையது மட்டுமின்றி மலக்குகளுடையவும் துவா ஆகும். இது நிச்சயமாகவும் ஹஸ்ரக் முஹம்மது (ஸல்) அவர்களின் அருள்களில் பட்டதாகும். அந்த அருள்கள் அதிகமாக பொழுந்துக் கொண்டிருக்கும். அதுவே இங்கு குறிப்பிடப்பட்டிருப்பது.

**“கௌசர்” “தாத்தம்”** (Kansar and Khatam) என்பது ஒரே விஷயத்தை குறிப்பிடும் இரண்டு பேருகளாகும். இவை இரண்டுக்கும் அர்த்தம் ஒன்றேயாகும். இதன் பொருள் ஹஸ்ரத் முஹம்மது(ஸல்) அவர்களின் அருளுக்கு ஒரு முடிவோ ஒரு எல்கையோ இல்லை என்றாகும் (அது வாயிலாக கிடைக்கும்) இந்த பதவி என்பது உன்னதமானதாகும். இந்த அருள் (பதவி) அன்னாரின் காலத்திற்கு பிறகும் மக்கள் பெற்றுக் கொண்டிருப்பார்கள் (திரு நபி மூலமாக கிடைக்கும்) அப்பதவியை பெற்றுக் கொள்ளும் எவர் ஒருவரும் நிச்சயமாக தூய தூதர்(ஸல்) அவர்களின் ஆன்மீக புதல்வர்களாக திகழ்வார்கள். இவ்வாறு இந்த உண்மையை உணர வேண்டும்.

பரிசுத்த தூதர்(ஸல்)வின் அருள்களை உலகெங்கும் எவ்வகையில் பரவச்செய்வது? இந்த லட்சியத்தை அடைவதற்கு ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாம் எந்த நிலையில் வேலைகளை மேற்க் கொள்ள வேண்டும்?

முதலாவதாக தூயதூதர்(ஸல்) அவர்களின் கடமைகள் என்னவென்பதை குறித்து அல்லாஹ் விளக்கினான். அதை விவரித்துக் கொண்டு அன்னார் ஒரு “காத்தீம்” என கூறினான். மட்டுமின்றி அன்னாரின் அருள்கள் உலகெங்கும் பரவிவிடுமென்றும் அறிவித்தான். அது பரவிக் கொண்டேயிருக்கும். அல்லாஹ் அன்னாரிடம் கூறினான் இந்த அருள்கள் மேலும் அதிகரிப்பதற்கு இந்த வார்த்தைகளின் உண்மையான அர்த்தத்தில் நீர் இருப்பாயாக. அதாவது நற்செய்தி வழங்குபவனாகவும் முன் எச்சரிக்கை விடுப்பவனாகவும் சாட்சியம் அளிப்பவனாகவும்

(நீர் இருப்பாயாக) அல்லாஹ் கூறினான். இச்செய்தி முழு உலகிற்காகவும் ஆகும். அவ்வாறு செய்யாமலிருந்தால் உங்களின் இவ்வேலை (கடமை) நிறைவடைவதில்லை. அதை தொடர்ந்து அல்லாஹ் விவரிக்கின்றான். நாம் உம்மை அல்லாஹ்வின்பால் அழைப்பவனாக ஆக்கியுள்ளோம். இந்த அருள்கள் மேலும் அதிகரிப்பதற்கு அதன்படி செயல்படுவீர். மட்டுமின்றி அல்லாஹ் உம்மீது பொழிந்திருக்கும் இந்த மூன்று தன்மைகள் இந்த லட்சியத்தை அடைவதற்கு போதுமானதாகும்.

மக்களுக்கு அல்லாஹ்வின்பால் அழைப்பு விடுதல் என்பது ஒரு சாட்சியமாகும். அது வாயிலாக நீர் ஒரு சாட்சியம் அளிப்பவனாக பரிணமிக்கின்றாய். இரண்டாவது விஷயம் (வழி) நற்செய்தி அளிப்பவனாகயிருக்க வேண்டும் மூன்றாவது விஷயம் எச்சரிக்கை விடுப்பவனாகவும் இருக்க வேண்டும். தூய தூதர்(ஸல்) அவர்கள் இந்த மூன்று வழிப்படியும் நடந்தார். முற்றிலும் சிறந்த நிலையில் அவர் அதில் திகழ்ந்தார். அதன்படி ஹஸ்ரத் முஹம்மது(ஸல்)வின் அந்த சீல்(முத்திரை) மிக சிறந்த சீலாக இருக்கின்றது. இந்த சீலின்பால் மேல் கூறிய மூன்று முத்திரைகளும் பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. இந்நிலையில் ஜமா அத்துச்சஹீஹில் இஸ்லாமின் ஒவ்வொரு உறுப்பினர்களும் நிச்சயமாகவும் எல்லா நேரங்களிலும் தங்களின் மனதில் திடம் வாய்ந்த தரத்தில் உறுதிபடுத்த வேண்டிய விஷயம் நாம் ஒவ்வொருவரும் “ஷஹீதாவோம்” “முபச்சிறாவோம்” “நதிறாவோம்” (Shahid, Mobasshar, and Nazir) (சாட்சிகளாவோம், நற்செய்தியாளராவோம், எச்சரிக்கை விடுப்பவர்களாவோம்)

நான் உங்களை பிரத்தேகமான நிலையில் நினைவூட்ட விரும்புகின்றேன். எல்லா இறைத்தூதர்களும் முதலில் நற்செய்தியாளர்களாவார்கள். அதற்குபின்னாகும் எச்சரிக்கை வழங்குவது. திருக்குர்ஆனும் இவ்விஷயத்தை எடுத்துரைக்கின்றது. அதாவது முதலில் நற்செய்தி வழங்குவோர்களும் அதற்குபின் எச்சரிக்கை வழங்குபோர்களும் (அல்லாஹ்வின் கட்டளைப்படி) அல்லாஹ்வின் அடியார்கள் கைகொள்ளும் வழி இதுவேயாகும். அதாவது அவர்கள் மக்களை சமீபித்துக் கொள்ளவேண்டியது இவ்வகையிலாகும். அவர்கள் மக்களை பயப்படுத்தக் கூடாது மாறாக அவர்கள் முதலில் நற்செய்தி வழங்கவேண்டும். இதுவே அவர்களின் முதல்வேலை.

அவ்வாறேயானால் அம்மக்கள் தங்களின் வாழ்க்கை முறைகளில் திருத்தத்தை ஏற்ப்படுத்திவிடலாம். அவர்களின் கவலைகளை அகற்ற அவர்கள் முன்வந்து விடலாம். அது வாயிலாக அனைத்து வித பயனும் அவர்களுக்கு கிடைத்துவிடலாம். அவர்களின் சுமைகளை குறைத்துக் கொள்ள எண்ணிவிடலாம். அதாவது நற்செய்தி வழங்குபோருக்கு சாட்சியத்துடன் நேரடித் தொடர்புள்ளது. ஆகவே நீங்களும் ஒரு சாட்சியாக பரிணமித்து விடுவதற்கான வாசல் உங்கள்முன் திறந்திருக்கின்றது. மற்றொரு வார்த்தையால் கூறிக்கொண்டால் நீங்கள் இப்போதே கூறிக்கொள்ள வேண்டும். ஆம்! நிச்சயமாக வாழ்ந்திருக்கும் ஒரு இறைவன் இருக்கின்றான். அதற்கு முதலில் சுயம் சாட்சியமளிக்க உங்களுக்கு முடிந்திட வேண்டும். ஹஸ்ரத் முஹம்மது(ஸல்) வழியாக அல்லாஹ் இருக்கின்றான் என்பதற்கு முற்றிலும் சிறந்த அடையாளங்கள் அவன் வழங்கியிருக்கின்றான்.

அல்லாஹ்வின் நிலை நிற்பைக் குறித்து (அவன் இருக்கின்றான்) ஹஸ்ரத் முஹம்மது(ஸல்) என்ற நபர் விளக்கித்தந்ததைப் போன்று இவ்வுலகில் எந்த ஒரு தத்துவ சிந்தகனுக்கும் விளக்கயியலாது. நிச்சயமாக அல்லாஹ் இருக்கின்றான் என்பதற்கு முஹம்மது(ஸல்) அவர்கள் முற்றிலும் சிறந்த சாட்சியமாக திகழ்கின்றார்.

ஜமா அத்துச்சஹீஹில் இஸ்லாம் நிச்சயமாகவும் ஒரு நற்செய்தியாளராகயிருக்க வேண்டும். மேலும் ஒரு எச்சரிக்கையாளராகவும் வேண்டும். சமூகத்தை அழித்துக் கொண்டிருக்கும் எல்லா வித அபாயங்களிலிருந்தும் மீட்சியைப் பெற நிங்கள் முன் எச்சரிக்கை விடுக்க வேண்டும். சமூக மக்களுக்கு மிக நல்ல உபதேசம் வழங்குவோர்களாக நீங்கள் மாறிட வேண்டும். அந்நேரம் அவர்களின் பிரச்சனைக்கு தீர்வு காணவோ அல்லது அதிலிருந்து அவர்கள் பின் திரும்பிக் கொள்ளவோ செய்து விடலாம். ஆகவே நாம் பிரச்சினைகளில் உட்பட்டு சுயம் திண்டாடிக் கொண்டிருந்தால்க் கூட நாம் (ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாம்) அமைதியுடையவும் சாந்தியுடையவும் சொர்கீய சுகத்தினுடையவும் வட்டாரத்திற்குள்ளேயே இருக்கின்றோம். ஆனால் பரிசுத்த தூதர்(ஸல்) அவர்கள் மீது அவதூறுகளை எழுப்பி நம்மிடம் பிரச்சினைகளை உருவாக்குவோர்கள் (அது வாயிலாக அவர்கள் அடைந்து விடும் சமாதானம்) நிச்சயமாக நரகத்தை அடைவார்கள்.

எவருக்காவது நாம் முன் எச்சரிக்கை வழங்கும் போது “போய் விடு! நீ நரகத்தை அடையும் சாபத்திற்குரியவனாகயிருக்கின்றாய்” என்ற வகையிலான பேச்சு வார்த்தை நமக்குரியதல்ல. முன்னெச்சரிக்கை வழங்கி கொள்ளும் பொழுது அந்த எச்சரிக்கை வாயிலாக கவலையடையும் நம் சகோதர-சகோதரிகளையும் மற்றும் நம் சகமக்களையும் போன்று நீங்களும் கவலையுடையவராக இருக்க வேண்டும். ஆம் நிச்சயமாகவும் இந்த முழுமைப்பெற்ற முறைகளை கடைப்பிடித்துக் கொண்டே ஹஸ்ரத் முஹம்மது(ஸல்) அவர்கள் மக்களுக்கு முன் எச்சரிக்கை விடுத்தது. அது ஒருபோதும் இன்றைய முல்லாக்கள் (பண்டிதர்கள்) செய்வது போன்றல்ல. தூதர்(ஸல்) விற்கு பிறகு தோன்றிய இவ்வகையிலான ஆள்களே குழப்பங்களை விளைவிக்கச் செய்தது. அவர்கள் பிறமக்களை பார்த்து கூறியிருந்ததாவது நீங்கள் நரகத்தின் விறகாவீர்கள். ஆனால் முஹம்மது முஸ்தபா(ஸல்) அவர்கள் மக்களின் வேதனைகளை உட்கொண்டிருந்ததோடு அவர்களுக்கு முன்னெச்சரிக்கையும் அளித்திருந்தார்.

அல்லாஹ் அன்னாரிடம் கூறினான் ஏய் முஹம்மது நீர் எவ்வகையில் மக்களுக்கு முன்னெச்சரிக்கை அளிக்கின்றாய்? அவர்களுக்கு முன்னெச்சரிக்கை அளிக்கும் நேரம் நீங்களும் அவர்களில் ஒருவரைப் போலவே அனுதாபத்துடனும் உணர்ச்சியுடனும் இருக்க வேண்டும். அதைப்போன்றே இந்த இறையடையாளத்தின் ஆரம்பகட்டத்தில் நாங்கள் சோதனைகளும் துன்புறுத்தல்களும் சந்தித்துக் கொண்டிருந்த வேளைகளில் அல்லாஹ் என்னை அறிவித்தான் **“ஒரு நாள் தாங்கள் அவர்களை பார்வையிடும்பொழுது அவர்களிடம் உங்களுக்கு அனுதாபம் உண்டாகும். இப்போது நீங்கள் வேதனையுடையவராவீர்கள். காரணம் அவர்கள் செய்யும் செயல்களால்! ஒருநேரம் வந்தடையும் (அல்லாஹ்வின் தண்டனைக்கு அவர்கள்**

ஆளாக்கப்படுவார்கள்) அப்பொழுது உங்களுக்கு அவர்களிடம் கனிவு உண்டாகிவிடும்."

**இதுவே முஹம்மது(ஸல்)வின் வழி. அதாவது முன்னெச்சரிக்கை நிச்சயமாவும் அளிக்க வேண்டியதாகும். அந்த முன்னெச்சரிக்கை அவர்களை திருத்திக் கொள்வதற்கும் சீரமைத்துக் கொள்வதற்குமாகயிருக்க வேண்டும். மக்கள் உங்களை தவிர்கக் கூடாது. மாறாக அவர்கள் திறந்த கரங்களுடன் உங்கள் அருகில் வரவேண்டும். முழு உலகமும் இன்று பௌதீகத்தின் ஈர்ப்பு வட்டாரத்திற்குள் இருக்கின்றது. இந்த சுக ஆனந்தங்களை பெற்றுக் கொள்ள அவர்கள் ஆவேசம் கொள்கின்றனர். இந்த தற்காலிகமான சுக ஆனந்தங்கள் வாயிலாக அவர்களின் வாழ்க்கையே இழக்க நேற்கின்றது என்பதை அவர்கள் உணர்ந்துக் கொள்வதில்லை. இதுவே சுதந்திரம் என்று இந்த மக்கள் எண்ணுகின்றனர். ஆகவே இந்த உலகம் சுதந்திரத்தினுடையவும் சுக ஆனந்தங்களுடையவும் சிறை சாலைக்குள் சங்கிலிகளால் கட்டப்பட்டிருக்கின்றது. இச்சூழ்நிலையில் அல்லாஹ்வின் பால் அழைப்பவர்கள் என்ற நிலையில் உங்களின் கடமைகள் இவ்வகை மக்களை திரு நபி(ஸல்) மூலமாக கிடைத்த வெளிப்பாடுகளுடையவும் சட்டங்களுடையவும் சிறை சாலைக்குள் நீங்கள் அழைக்க வேண்டும் என்பதாகும். மற்றொரு வார்த்தையைக் கொண்டு கூறினால் பௌதீக சுகம் என்பதை அவர்கள் சுதந்திரமாக காண்கின்றனர். ஆனால் அல்லாஹ்வை வணங்குவதையும் அவன் கட்டளைகளை பின்பற்றிக் கொள்வதையும் சிறைவாசம் என்று அவர்கள் எண்ணுகின்றார்கள். பௌதீக சிறைசாலைக்குள் சட்டங்கள் உள்ளது. அச்சட்டங்களை அவர்கள் காலையிலும் மாலையிலும் கடைபிடிக்க வேண்டும்.**

அதைப் போன்றே இரவிலும்பகலிலும் கட்டுபாட்டிற்கு உட்பட்ட முறையில் கடைப்பிடித்திட வேண்டிய இறைவனின் சிறைசாலையின்பால் நீங்கள் (இறை வழியின்பால்) மக்களுக்கு அழைப்பு விடுங்கள். இந்த நேற்வழியின் பால் அழைத்து கொள்ளுங்கள். இதுவொரு எளிதான வழியல்ல. (அல்லாஹ்வின்பால் அவர்களை எட்டவைப்பது) எந்த ரீதியில் இவ்வேலையை நீங்கள் செய்துக் கொள்ள முயற்சித்தாலும் அவர்களின் இதயங்களை கீழ்படியவைக்க உங்களுக்கு முடியாது. அதற்கு அல்லாஹ்வின் உதவி எவர் ஒருவருக்கும் அவசியமாகும் (துவா வழியாக). "துவா வாயிலாகவே அவ்வகை இதயங்களை கீழ்ப்படிய வைத்துக் கொள்ள முடிவது. முஹம்மது ஆன்மீகமாக மரணித்தவர்களை வாழ்க்கையின்பால் திரும்பப்பெறச் செய்தது அல்லாஹ்வின் உதவிவாயிலாகவும் பிரார்த்தனை வழியாகவும் ஆகும். ஆகவே நாமும் (ஜமாஅத்துச்சஹீஹில் இஸ்லாம்) அனுதினம் துவாவில் மூழ்கியிருக்க வேண்டும். "ரப்பி அரினி கைப்ப துஹையுல் மௌத" என் இரட்சகா மரணித்தவர்களுக்கு உயிர் அளிப்பது எவ்வாறு என்று காண்பிப்பாயாக. ஆமீன்.

இவ்வகை அருள்களிலிருந்து நீங்கள் வெளியேற்றப்பட்டிருந்தால் அதாவது வாழ்க்கையில் உங்களுக்கு வெற்றியடைய முடியவில்லையென்றால் உங்களின் வாழ்க்கை பலனற்றது என எண்ணவேண்டும் (இதுவே உண்மை). உங்களுக்கு கிடைக்கும் ஆன்மீக பலன்களுக்கு, அடையாளங்கள் வழியாக நீங்களே சுயம்

சாட்சியாகயிருக்க வேண்டும். (அவ்வகை அடையாளங்களை) நீங்கள் கண்களால் பார்வையிடவும் நீங்கள் சுயம் மகிழ்ச்சியடையவும் வேண்டும். உங்களின் விளக்குகளை (இதயத்தின் விளக்குகளை) நீங்களே சுயம் உருவாக்கிக் கொள்ள வேண்டும். அவ்வகை விளக்குகளுக்கு மற்று விளக்குகளை ஒளிக்கச் செய்வதற்கான ஆற்றல்கள் இருக்கும். இன்ஷா அல்லாஹ்! அல்லாஹ்வே உன் தூய்மையினை நான் புகழ்கின்றேன். நீயன்றி வணக்கத்திற்குரியவன் வேறு எவருமில்லை. பாவமன்னிப்புக்காக நான் மன்றாடுகின்றேன். பட்சாதாபத்துடன் உன்னிடம் திரும்பிக் கொள்கின்றேன். ஆமீன்


**Issued by:**

Jamaat Ul sahih Al Islam
Dawa Department
Tamil Nadu, India
**Cell:** 7339689239
**Web:** www.jamaat-ul-sahih-al- islam.com

**Translated by:**

AZIM AHMAD
**E-mail:** azimahmad070@gmail.com
**Cell:** 9789180817